DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**STC.No.113/2023**
**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | சுய தொழில் |
| பெயர் | - | மதனகோபால் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | ராதாகிருஷ்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 50/2025 |
| சாதி | - | | | | |

**24-09-2025**

**( எதிரி ஆஜரில்லை)**
(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறையில் KGR எஸ்டேட் நடத்தி வந்தேன். எதிரி எனது மகன் ஆவார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. பொள்ளாச்சியிலிருந்து, வால்பாறை குரங்குமுடியில் உள்ள எனது KGR எஸ்டேட்டிற்கு வந்தேன். காலை 09.30 மணியளவில் நான் எஸ்டேட்டிற்கு வரும் போது, எனது மகன் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் KGR எஸ்டேட்டில் உள்ள தேயிலை இலைகளை எனது மகன் பறித்துவிட்டு வாட்டர்பால்ஸ் எஸ்டேட்டிற்கு விற்கலாம் என உத்தரவு பெற்றிருந்தார். நான் எஸ்டேட்டில் எனக்கென்று ஒதுக்கிய அறைக்கு செல்லும் போது அந்த உத்தரவை சொல்லி கேட்டிற்குள் சென்று நின்று கொண்டார். எஸ்டேட்டில் இருந்த 5 அறைகளில் ஒரு அறை எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இன்னொரு அறை வேண்டும் என்று நான் கேட்டு அந்த அறைக்கு செல்லும் போது எதிரி அதிலிருந்த கேட்டை இழுத்து பூட்டினார். அதில் அந்த கேட் எனது வலது பக்க தோள் பட்டையில் அடித்து விட்டது. என்னுடைய இன்சியலை தாங்கள் தங்கள் பெயரின் முன்னால் போட்டுக்கொண்டுள்ளதால் என்னை உயிரோடு விடுவதாக மிரட்டினார். நான் அங்கிருந்து வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையிலிருந்த போது, வால்பாறை போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் வாக்குமூலம் அ.சா.அ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எத்தனை மணிக்கு எஸ்டேட்டிற்கு போனேன் என்றால் 09.00 – 09.30 மணியளவில் போயிருப்பேன். சரியாக நினைவில்லை. வழக்கமாக எஸ்டேட்டில் தொழிலாளர்கள் எத்தனை மணிக்கு வேலைக்கு வருவார்கள் என்றால் 06.00 மணிக்கு மருந்தடிக்கும் வேலை

இருக்கும். வேலை இருக்கும் ஆண்கள் மட்டுமே மஸ்டருக்கு வருவார்கள். அன்றைய தினம் எங்கு மருந்தடிக்க சொல்லுகிறோமோ அங்கு மருந்தடித்துவிட்டு 07.00 மணிக்கு களத்திற்கு சென்றுவிடுவார்கள். மருத்துவமனைக்கு நான் மட்டும் சென்றேனா என்றால் இல்லை. எனது ஓட்டுநருடன் சென்றேன். மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றுக்கொண்ட போது நடந்தவற்றை சொன்னேனா என்றால் ஆமாம். மருத்துவமனையில் எத்தனை நாள் சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் 2, 3 மணி நேரம் இருந்து சிகிச்சை பெற்றுக்கொண்டேன். மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் ஆமாம். கோயம்புத்தூருக்கு சென்றேன். எந்த தேதியில் சென்றேன் என்றால் அன்றைய தினமே சென்றேன். எனக்கும், எனது மகனுக்கும் சொத்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும், எனது மகனுக்கும் உள்ள சொத்து பிரச்சனைக்காக அவர்களுக்கு எதிராக நான் தவறாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல. போலீசார் எழுதிய புகாரில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.